15.03.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.205/2018</u>

அ.சா. 12

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புருசோத்தமன் | | |
| த/பெ | செல்வராஜ் | | |
| கிராமம் | பண்ருட்டி | தொழில் | |
| தாலுக்கா | பண்ருட்டி | வயது | 54 /2024 |
| மாவட்டம் | கடலூர் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கடலூர் இரயில்வே காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014ம்ஆண்டு விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் நிலைய எழுத்தராக பணியிலிருந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு நன்கு தெரியும். கடந்த 06.05.2014 அன்று டி.எஸ்.பி திருச்சி கிரைம் மீட்டிங்கிற்கு நானும், ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் சேகர், சிறப்பு உதவி ஆய்வாளர் அசோகன் ஆகியோர் சென்றோம். பகல் 11 மணிக்கு ஆய்வாளர் திரு. வாசுதேவன் என்பவருக்கு தொலைபேசி மூலமாக ஒருவரை காவல் நிலையத்தில் வைத்துள்ளோம் என்று தகவல் சொன்னார்கள். மதியம் 1.30 மணிக்கு மீட்டிங் முடிந்தது. குருவாயூர் எக்ஸ்பிரஸ் இரயிலில் நானும், ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் சேகர் ஆகியோர் நிலையம் வந்தோம். சேகர் மட்டும் திண்டிவனம் அவரது சொந்த ஊர் என்பதால் அங்கு சென்றுவிட்டார். அங்கு ஜெயவேல் என்பவரும், ஒரு துரை என்பவரும் இருந்தார்கள். ஆய்வாளர் அவரது அறைக்கு சென்றுவிட்டார். நான் நிலைய எழுத்தர் என்பதால் 01.05.2014ந் தேதி சென்னை சென்ட்ரலில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. அதனால் லோக்கல் போலீசார் ஒரு முனையத்தில் வந்து வாகன தணிக்கையில் ஈடுபட்டார்கள். நான் அந்த லிஸ்டை வாங்கி எங்களது உயர் அதிகாரிகளுக்கு கொடுக்கவேண்டும். அதனால்அந்த பணியில்

இருந்தேன். நான் ரைட்டர் என்பதால் மறுநாள் 07.05.2014 அன்று அனைவருக்கும் டியூட்டி போடவேண்டும் என்பதால் அன்றே மாலை 5.30 மணிக்கு முதல் நாள் 06.05.2014ந் தேதியிலேயே டியூட்டி போட்டுவிட்டு அறையிலிருந்த ஆய்வாளரிடம் விவரங்களை சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். ஆய்வாளர் காலையில் கொஞ்சம் சீக்கிரம் வாங்கள் என்று கூறினார். நான் மறுநாள் 07.05.2014 காலை 9.1/4 மணிக்கு காவல் நிலையம் வந்தேன். அப்போது காவலில் விசாரணைக்காக வைக்கப்பட்ட ஜெயவேலு என்பவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் ஆய்வாளர், காவலர் கள் அன்பரசு, நாத், லோகேஸ்குமார் ஆகியவர்கள் ஜெயவேலின் உடல்நிலை குறித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் அசாரியா என்பவர் ஆய்வாளரிடம் ஒரு புகார் ஒன்றை கொடுத்தார். அசாரியா கொடுத்த புகார் சம்மந்தமாக ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை மற்றும் மற்ற விவரங்களை தயார் செய்தார். பி.எஸ்.ஆர் எழுதியதில் அனைவரும் கையெழுத்து போட சொன்னார்கள். அதில் நானும் கையெழுத்து போட்டேன். அதன் பிறகு அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் ஜீப்பில் ஆய்வாளர், காவலர் அன்பரசன், ஸ்ரீநாத் ஆகியோர் அவரை அழைத்து கொண்டு மருத்துவமனை சென்றார்கள். அதன் பிறகு மற்ற காவல் நிலையங்களிலிருந்து எங்கள் காவல் நிலையத்திற்கு போன் வந்துக்கொண்டே இருந்தது. அதை பெண் காவலர் சித்ரா அட்டர்ன் செய்தார். மதியம் 1.30 மணிக்கு ஆய்வாளர் நிலையம் வந்தார். ஜெயவேல் இறந்துவிட்டதாக சொன்னார். அவரது உடலை முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் பிணஅறையில் வைத்திருப்பதாக தெரிவித்தார். இது குறித்து விசாரிக்க திருச்சியிலிருந்து எங்களது துறையை சேர்ந்த மேல்அதிகாரிகள் ஏ.டி.,எஸ்.பி., டி.எஸ், பி., எஸ்.பி இன்ஸ்பெக்டர், திருச்சி இன்ஸ்பெக்டர் , சிதம்பரம் இன்ஸ்பெக்டர் ஆகியோர் மதியம் 2.30 மணிக்கு எங்கள் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தார்கள். ஆய்வாளரிடம் விசாரணை நடத்தினார்கள். அதன் பிறகு புகார் மனுவை ஆய்வாளர் டி.எஸ்.பி.யிடம் கொடுத்தார். அதன் பிறகு முதல் தகவல் அறிக்கையை டி.எஸ்.பி பதிவு செய்தார். நிலைய கு.எண்.26/2014 பிரிவு 176(1) கு..வி.மு.ச ன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்தார்கள். அதன் பிறகு மறுநாள் காலை 08.05.2014 அன்று எதிரிகள் 5 பேரையும் இந்த வழக்கு சம்மந்தமாக இடைநீக்கம் செய்வதாக டி.ஐ.ஜி அலுவலகத்திலிருந்து ஒரு உத்தரவு வந்தது. அதன் பிறகு நீதித்துறை நடுவர் அவர்கள்

விசாரணை நடத்தினார். அப்போது அனைவரும் பதட்டமான நிலையில் இருந்தோம். அதனால் சரியான தகவல் அவர்களுக்கு போகவில்லை. அதன் பிறகு சி.பி.சி.ஐ.டி விசாரணை நடந்த போது நான் நடந்தது அனைத்தையும் சொன்னேன். இது சம்மந்தமாக சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

__1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.__

இந்த வழக்கில் நீதித்துறை நடுவர் என்னை விசாரணை செய்தார். அப்போது இந்த விவரங்களை நான் சி.பி.சி.ஐ.டி விசாரணையிலும், நீதித்துறை நடுவர் விசாரணையிலும் முன்னதாக நடந்த எங்களது துறைவாரியான விசாரணையிலும் சொன்னேன். என்னுடன் பணியாற்றிய காவலர் லோகேஸ்குமார் என்பவரை எனக்கு தெரியும். அவர் இது போன்ற ஆட்களை அடித்து பணம் வாங்குவார் என்றும், அதே போல் வெளி ஆட்களை வைத்து குற்றசெயல்களில் ஈடுபடுவார் என்றும் சொன்னால் சரிதான். அதே போன்று ஆட்களை ரகசியமாக அழைத்து சென்று பராமரிப்பார் என்றால் சரிதான். அது போன்று அவர் ரகசியமாக அடைத்து வைத்திருந்த ஜெயவேலுவை அடித்து கொடுமைப்படுத்தினார் என்றும், நாங்கள் அனைவரும் சென்னை குண்டுவெடிப்பு சம்மந்தமாக காவல் நிலையத்தில் இல்லாததை பயன்படுத்தி அவரை கொண்டு வந்து காவல் நிலையத்தில் தான் செய்த குற்றத்தை மறைப்பதற்காக காவல் துறையில் தனக்கு வேண்டிய உயர் அதிகாரிகளை பயன்படுத்தி இந்த வழக்கை அவரே சாட்சியங்களை தயார் செய்து பொய்யான விவரங்களுடன் பதிவு செய்தார் என்றால் சரிதான்.

__3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.__

06.05.2014ந் தேதி திருச்சி இரயில்வே போலீஸ் அலுவலகத்தில் மீட்டிங் நடந்தது. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை சி.பி.சி.ஐ.டி போலீசார் சம்பவம் நடந்து ஒரு மாதம் கழித்து விசாரித்தார்கள். விசாரிக்கும் காலத்தில் 06.05.2014ந் தேதி ஆய்வாளருக்கு விழுப்புரத்திலிருந்து ஒரு நபரை விசாரணைக்காக அழைத்தும் வந்தோம் என்ற விவரத்தை சி.பி.சி.ஐ.டி விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சி.பி.சி.ஐ.டி விசாரணையில் ஜெயவேலுக்கு உடல்நிலை சரியில்லாத நேரத்தில் 07.05.2014 அன்று எத்தனை மணிக்கு ஜெயவேல் மீது அசாரியா என்பவர் புகார் அளித்தார் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை. அதே போல் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது அவர் மீது முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்யுங்கள் என்று ஆய்வாளர் சொன்னதாக நான் சி.பி.சி.ஐ.டி விசாரணையில் சொல்லவில்லை. அசாரியாவை யார் என்று எனக்கு தெரியாது. ஜெயவேலின் இறப்பிற்கு பிறகு விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் என்னை விசாரித்தார்கள். 7ந்தேதி மாலையே என்னை வாய்மொழியாக விசாரித்தார்கள் . 8ந் தேதி ரகசிய வாக்குமூலம் பதிவு செய்தார்கள். 7ந் தேதி என்னை வாய்மொழியாக விசாரித்தபோது நேரம் இரவு 8 மணி இருக்கும். அப்போது திருச்சி டி.எஸ்.பி. தனவேல், ஏ.டி.எஸ்.பி. ஆய்வாளர்கள் ஆகிய அனைவரும் இருந்தார்கள். அப்போது விசாரித்த காலத்தில் நான் அவர்களிடமும், நீதித்துறை நடுவரிடமும் நான் திருச்சியில் மீட்டிங் முடித்துவிட்டு நேரடியாக ஊருக்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலையில் தான் வந்தேன். அதனால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 06.05.2014ந் தேதியில் நான் ஊருக்கு போய்விட்டதால் ஆய்வாளர் காவல் நிலையம் சென்றாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை விசாரித்த போது மீட்டிங்கிற்கு நீங்கள் அனைவரும் சென்று வந்திருக்கிறீர்கள் அதனால் உங்களுக்கு விவரம் தெரியும் என்று என்னிடம் கேட்டார்கள். அவர்கள் விசாரித்தபோது 06.05.2014ந் தேதி மாலை ஆய்வாளர் காவல் நிலையத்தில் செல்வதாக நாங்கள் ஒரு வாக்குமூலம் பதிவு செய்துள்ளோம். அதை நாங்கள் சொல்லியே ஆகவேண்டும் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். வாசுதேவன் ஆய்வாளருக்கும், ஜெயவேலின் இறப்பிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

**<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

06.05.2014ந் தேதி திருச்சி போய்விட்டு எத்தனை மணிக்கு திரும்பிவந்தேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் நேரடியாக காவல் நிலையம் வராமல் வீட்டிற்கு தான் சென்றேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு நான் வந்தபோது ஜெயவேல் அங்கு இருந்தார் என்ற விவரத்தை நான் எங்கும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். மறுநாள் குண்டுவெடிப்பு சம்மந்தமாக லோக்கல் போலீசார் அனைவரும் காவல் நிலையத்தில் இல்லை என்ற விவரத்தை நீதித்துறை நடுவர் விசாரணையிலோ அல்லது முதலில் நடத்தப்பட்ட காவல் துறை விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சி.பி.சீ.ஐ.டி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணைக்கான வாய்ப்பு முடிக்கப்பட்டது.**